17.09.2025

அ.வ.எண். 216/2021

வா.சா.1 - பூங்கொடி, க/பெ. தங்கவேல்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 17.09.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள க.ச.எண்.233/1 B, 1C, 1 D சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது. க.ச.எண்.233/1 A பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.க.ச.எண்.233/1F என்பது குப்பம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் 2- 3 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. வரைபடத்தில் க.ச.எண்.233/1 E தென்வடலாக சென்று கிழமேலாக செல்லும் தடத்தில் தான் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். க.ச.எண்.233/1 E தடம் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ளது என உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில், தென்வடல் தடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், கிழமேல் தடம் குறிப்பிடவில்லை என்றால் மாமூல் வழிநடை தடம் என உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில், தென்வடல் தடமானது, கருப்ப கவுண்டரின் 233/1A நிலத்திற்கு செல்ல ஏற்படுத்தப்பட்டது என்றும், அதில் மற்ற பாகஸ்தர்களுக்கு உரிமை இல்லை என்றால் முத்துக்கவுண்டரின் சொத்துக்களை வாங்கியதால் எங்களுக்கு பாத்தியம் ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ல் குப்பம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தின், வடகோட்டில் 3 ஆண்டுகளுக்கு மண் எடுப்பதற்காக கருப்ப கவுண்டருக்கும், முத்துக் கவுண்டருக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளதால் முத்துக்கவுண்டருக்கு அந்த பாதையை பயன்படுத்த உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றால் சொத்தை கிரயம் பெறும்போது முத்துக்கவுண்டருக்கு வழிநடை பாத்தியம் உள்ளது.

3. வா.சா.ஆ.1 அடிப்படையில், அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் இருந்து 3 ஆண்டு காலம் முடிந்தவுடன் முத்துக்கவுண்டருக்கு மண் எடுக்கும் உரிமை முடிந்துவிட்டது என்றும், அதனால் அந்த பாதையை பயன்படுத்தும் உரிமை

முடிந்துவிட்டது என்றால் முத்துக்கவுண்டர், தேவராஜிற்கு எழுதி கொடுத்த பத்திரத்திலும் மாமூல் வழித்தடம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடத்தினை பயன்படுத்தி கருப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு மட்டுமே செல்ல முடியும் என்றும், மற்ற க.ச.எண்.233/1 B, 1C, 1 D காலைகளுக்கு இந்த தடத்தின் வழியாக செல்ல முடியாது என்றும், எங்களுக்கு உப்பிலிபாளையம் கிராமம் வழியாக செல்லும் தடத்தை தான் நாங்கள் பயன்படுத்தி வந்தோம் என்றால் க.ச.எண்.233/1 E வழியாக தான் தடப்பாத்தியம் உள்ளதாக என் கணவர் சொன்னார்.

4. உப்பிலிபாளையம் வருவற்கு தனியாக பாதை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. க.ச.எண்.233/1 E ல் கிழமேல் தடமானது 2015 ம் ஆண்டு வரை இல்லை என்றால் சரியல்ல, முன்பே இருந்துள்ளது. வா.சா.ஆ.6 பாகப்பிரிவினை பத்திரத்தை 2021 ம் ஆண்டில், என் மகன்களுடன் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 பாகப்பிரிவினையில் வழக்கு சொத்தையும் சேர்த்து எழுதியுள்ளோம் என்றால் சரிதான், வா.சா.ஆ. 6 சொத்து விவரத்தில் க.ச.எண்.233/1 B, 1C, 1 D சொத்துக்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், க.ச.எண்.233/1E பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முன்னதாக உள்ள ஆவணத்தை பார்த்து அதில் உள்ளவாறு எழுதப்பட்டுள்ளது.

5. வா.சா.ஆ.6 ஆவணத்தில் தடத்தை பற்றியோ, அதன் உரிமை பற்றியோ சொல்லவில்லை என்றால் சரிதான். 13.11.2015 ம் ஆண்டு கருப்ப கவுண்டர் மகன் பழனிச்சாமியின் வாரிசுகள் சேர்ந்து 7795/2015 என்ற பாகசாசன பத்திரம் ஏற்படும்போது தான் கிழமேல் தடம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதற்கு முன்பாகவே இருந்ததாக என் கணவர் சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணத்தில், முத்துக்கவுண்டருக்கு வந்த உரிமையை முத்துக்கவுண்டர் தேவராஜிற்கும், தேவராஜ் அவருக்கு வந்த உரிமையை எனக்கும், எழுதி வைக்க முடியும் என்றும் முத்துக்கவுண்டருக்கு இல்லாத உரிமையை நான் கோர முடியாது என்றால் சரியல்ல. முத்துக்கவுண்டருக்கு தடம் பாத்தியம் உள்ள நிலையில் தேவராஜிற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

6. வா.சா.ஆ.11 பட்டாவில் எனது தடம் இல்லை என்றால் சரிதான், முத்துக்கவுண்டர் பெயர் உள்ளது. பட்டாவில் பெயர் சேர்க்க சொல்லி ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலகத்தில் கேட்டேன். வா.சா.ஆ.8 மற்றும் 9 & 10 ஆவணத்தில், க.ச.எண்.233/1B, 1C, 1 D க்கு பட்டாவில் எங்களது பெயர் சேர்க்கப்பட்டுவிட்டது. க.ச.எண்.233/1E முத்துக்கவுண்டருக்கு உரிமை இல்லாத காரணத்தால் தான் எங்களது பெயரை சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.1 ஆவணத்தில், தென்வடல் தடத்தில் எங்களுக்கு உரிமை இல்லை என்றும், கிழமேல் தடம் ஆவணத்தில் இல்லை என்றும், உரிமை இல்லாத தடத்திலும், பயன்படுத்தாத தடத்தையும் எங்களுக்கு உரிமை உள்ளதாக பயன்படுத்தியதாக பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் 1ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து ஏற்றுக்கொண்டனர்.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur